1969 ஆகஸ்ட் 18]

பட்டிவீரன்பட்டியில் ஏலக்காய் எண்ணெய் ஆலை

*17 வின.—திரு. பெ. மலேச்சாமி: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், பட்டிவீரன்பட்டியில் ஏலக்காய் எண்ணெய் ஆலை ஒன்று நிறுவுவதற்குரிய செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது நிறுவப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) வின எழவில்லை.

திரு. பெ. மலேச்சாமி: தலைவர் அவர்களே, பட்டிவீரன்பட்டி பகுதியில் ஏலக்காய் உற்பத்தி அதிகமாக இருக்கிறது. அதிகமாக உற்பத்தியாவதைக் கொண்டு அங்கு ஒரு ஆலை நிறுவ வேண்டுமென்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே அரசுக் குறிப்பு இருந்ததாகத் தெரிகிறது. 1967-68-ம் ஆண்டு நிதிநிலை விளக்கக் குறிப்பில்கூட இதுபற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே, அரசு மீண்டும் இதைப் பரிசிலிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நம்முடைய தமிழ்நாட்டிலே கிடைக்கக்கூடிய ஏலக்காயில் பெரும் பகுதி வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஏற்றுமதி செய்வதன் மூலம் அதிக லாபமும், அன்னியச் செலாவணியும் கிடைக்கிறது. ஆகவே, உற்பத்தி செய்கின்றவர்கள் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதைத் தான் விரும்புகிறார்கள். இதிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை ஏற்படுத்தலாமா என்று ஆராய்ச்சி செய்யப்பட்டது. ஆனல், அப்படி உற்பத்தி செய்யக்கூடிய எண்ணெய்க்கு வெளிநாட்டிலே சந்தை இல்லை. உள்நாட்டிலும் சந்தை இல்லை. அந்த எண்ணெய் ஓரளவுக்குத்தான்—குறுகிய அளவு—மருத்துவத் துறைக்குத் தேவைப்படுகிறது. ஆகவே, இப்போதைக்கு வெளிநாட்டிலிருந்து பெறக்கூடிய லாபத்தை நாம் குறைத்துக் கொள்வதாக உத்தேசம் இல்லை. அரேபியா, பிரிட்டன் போன்ற நாடுகள் இதை அப்படியே வாங்கி, பொடியாக்கி உபயோகப் படுத்துவதையே விரும்புகிறார்கள். எண்ணெய்யாக வேண்டுமென்று சொல்லுகிறார்களா என்று பார்த்தால், அந்நாட்டு மருத்துவத் துறையின் உபயோகத்திற்குக் கொஞ்சம்தான் வேண்டும் என்று சொல்லுகிறார்கள். வேண்டும் என்று சொல்லுகிறவர்களும், நாமே அந்த எண்ணெய்யை உற்பத்தி செய்து கொடுப்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. எங்களுக்கு ஏலக்காயை அனுப்புங்கள், நாங்கள் எண்ணெய் ஆக்கிக்கொள்ளுகிறோம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். மருத்துவத் துறைக்கு ஏற்ற முறைப்படி அவர்களே எண்ணெய் உற்பத்தி செய்யவேண்டும் என்று சொல்வதால் இப்போதைக்கு அந்தப் பரிசிலனையை எடுத்துக் கொள்வதாக இல்லை.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏலக்காய் நம்முடைய பகுதியில் அதிகமாகக் கிடைக்காமலிருக்கிறது. ஆனால், நெல் அதிகமாகக் கிடைக்கிறது. நெல்லின் உமியிலிருந்து எரிபொருளும் எண்ணெயும் உண்டாக்கலாம் என்று சொன்னார்கள். அதைக்கொண்டு தொழில் ஆரம்பிப்பதற்கு கனம் அமைச்சருக்கோ அல்லது இந்த அரசுக்கோ ஏதாவது மனு வந்ததா ? அதன்மீது இந்த ஆட்சி நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவுத் துறையைப் பற்றிக் கனம் உறுப்பினர் மனத்திலே வைத்துக்கொண்டு இந்தக் கேள்வியைக் கேட்கிறார்கள். இது ஒன்றும் புதிய ஆராய்ச்சி அல்ல. திருவாரூரில் நிரூபித்துக் காண்பித்து இருக்கிறார்கள். கூட்டுறவுத் துறையில் நடக்கின்ற ஆலையில் உமியிலிருந்து எண்ணெய் எடுக்கலாம் என்றும், உணவுப் பொருளாக மாற்ற முடியும் என்றும் நாம் கண்டிருக்கிறோம். இந்த ஆராய்ச்சியும் நல்ல ஆராய்ச்சி என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதைப் பற்றித்தான் கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் மிக ஆர்வமாக இப்பொழுது சிந்தித்து வருகிறார்கள்.

Slum Improvement

* 18 Q.—THIRU N. S. V. CHITHAN :
THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the attention of the Government has been drawn to the judgment of the Madras High Court in the Slum Improvement (Acquisition) Act case delivered in February 1968; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு 1954-ம் ஆண்டு தாழ் குடியிருப்புப் பகுதி **(Slum)** மேம்பாட்டு (நிலம் கையகப்படுத்துதல்) சட்டம் (தமிழ் நாடு சட்டம் 11/1954) கீழே குறிப்பிட்டுள்ள காரணங்களுக்காக உயர்நீதி மன்றத்தால் செல்திறனற்றதென்று ரத்து செய்யப் பட்டது.

(1) இச் சட்டத்தைச் சேர்ந்த 6-வது பிரிவின் கீழ் வழங்கப் படத்தக்க இழப்பீட்டுத் தொகை ஏமாற்றமளிப்பதாகும். அதனால் அரசியலமைப்பின் நான்காம் திருத்தத்திற்கு முன்பிருந்த படியுள்ள அரசியலமைப்புச் சட்டத்தின் 31(2) பிரிவை அந்தச் சட்டம் மீறுவதாகும்.

(2) அரசியலமைப்பின் 31(5) (b) (ii) பிரிவின் கீழ் இச்சட்டத்திற்கு விலக்களிக்க இயலாது.

THIRU K. VINAYAKAM : Sir, the lands belonging to a temple in Kodambakkam was sought to be acquired under this Act. The temple authorities went to the High Court objecting to the acquisition. Was the acquisition dropped subsequent to the judgement delivered by the High Court or is it still being pursued?